# அத்தனகல தேர்தல் அப்பீல் தள்ளுபடி

Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU [தபால்] பெட்டி எண் : 49

மலர் 9 இதழ் 74
போன் 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க சித்திரை 13 முஹறம் 15 புதன்கிழமை [26-4-67]

## சிறிமா பதவியைக் காப்பாற்றினர்

கொழும்பு, செவ்.

அத்தனக்கலை தொகுதியில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா பிரதிநிதிகள் சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 'அப்பீல்' வழக்கு இன்று செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயகா அத்தனக்கலைத் தொகுதியில் எம். பி.யாகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து கீழ்க் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முன்னர் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அந்தத்தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் மனுதாக்கல் செய்யப்பட்டது. அதனை பிரதம நீதியரசர் எச். என். ஜி. பெர்னாண்டோ, நீதியரசர்கள் எச். டபிள்யு. தம்பையா, சிவசுப்பிரமணியம் ஆகியவர்கள் விசாரணை செய்தபின்னர் இன்று செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்தனர். இதனல் திருமதி பண்டாரநாயகா தமது எம். பி. பதவியைக் காப்பாற்றிக் கொண்டார்.

# 'மாவட்டசபை' ஏற்கப்பட்ட கொள்கை; இதில் தயக்கம் ஏன்

## மிருசுவிலில்படித்த பெண்கள் குடியேற்றத் திட்டம்

### அடுத்த மாதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

மிருசுவிலில் படித்தபெண்களுக்காகஅமைக்கப்படவிருக்கும் குடியேற்றத்திட்டம் அடுத்தமாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாக விருக்கின்றது. இக் குடியேற்றத்திட்டத்தில் தெரிவு செய்யப்படும் பெண்கள் தங்குவதற்கான கட்டட வேலைகளும். நீர் விநியோக விஸ்தரிப்பு வேலைகளும் இம் மாத இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இக் குடியேற்றம் சம்பந்தமான துரிதமான வேலைகளை யாழ்ப்பாணம் கூட்டு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் மேற்கொண்டு வருகிருர்.

இக் குடியேற்றத்திட்டத்திற்காக 45 படித்த பெண்கள் இப்போது தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் ஐந்துபெண்களை தேர்ந்தெடுக்க அரசாங்கத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் வெற்று நிலங்களில் வெவகாயம், மிளகாய், கிழங்கு, வாழை போன்ற உப உணவுப் பொருட்களை முதலில் பயிரிட அரசாங்கம் ஆதரவு கொடுக்கும். காலகிரமத்தில் இப் பெண்களுக்கான ஒரு பொது நெசவு நிலையத்தையும் இக்காணியில் அரசாங்கம் அமைத்துக் கொடுக்கவிருக்கின்றது. [ந. நி]

## 'கடன்களை அழித்துவிட்டு நிம்மதியாக இருப்போம்'

### சுவீப்அதிஷ்டசாலியின் மனைவி கூறுகிருர்

—நமது நிருபர் கா. யோகநாதன்—

யாழ்ப்பாணம், புதன்

பதினறு வருடங்கள் அரசாங்க சேவையிலிருந்த என் கணவர் 62-ம் ஆண்டு சிங்களச் சட்டத்தால் வேலையிழந்தார். அதன் பின் ஊரோடு வந்துவிட்டோம். எங்களுக்கு ஏராளம் கடன் உண்டு. கடன்களைக் கொடுத்துவிட்டு நிம்மதியாக இருக்க விரும்புகிருேம்.

138-வது தேசிய லொத்தர்சபையின் சீட்டிழுப்பில் முதற் பரிசான 77,900 ரூபா பெற்ற மந்திகை வேலுப்பிள்ளையின் மனைவி வள்ளிப்பிள்ளை என்னிடம் மேற்கண்டவாறு கூறினர். வேலுப்பிள்ளை பணத்தைப் பெறுவதற்காக நேற்றுமுன்தினம் கொழும்பு சென்றுவிட்டார். அவரின் மனைவியான வள்ளிப்பிள்ளைதான் கடையில் இருந்தார். அது ஒரு பலசரக்குக்கடை. அத்துடன் பத்திரிகைகள், சுவீப் டிக்கட் விற்பனை செய்யப்படுவது வழக்கம்.

வேலுப்பிள்ளை [வயது46] 1946-ம் ஆண்டு அரசாங்க சேவையில் சேர்ந்து உதவி ஸ்ரேஷன்மாஸ்டராகக் கடமையாற்றி வந்தார். வேலையை விட்டபின் வீட்டோடு வந்து விட்டார். இவர்களுக்கு 4 பெண்கள் உட்பட ஏழு குழந்தைகள். மகேந்திரராஜா[வயது 17], செல்வராணி [வயது 14], புஸ்பராணி [வயது 12], இன்பராணி [வயது 11], இந்திராணி [வயது 10], ஸ்ரீஸ்கந்தராசா [வயது 7], விக்னராசா [வயது 5] ஆகிய 7 குழந்தைகளும் பெற்ருேருடன்தான் வசிக்கிருர்கள். மூத்த மகன் ஹாட்லிக் கல்லூரியிலும், செல்வராணி இந்துக்கல்லூரியிலும் மற்றவர்கள் புட்டளை வித்தியாசாலையிலும் படிக்கிருர்கள்.

இவர்களுக்கு மந்திகையில் 10 பரப்பு வீடு வளவு உண்டு. ''வியாபாரம் செய்வதற்காக இந்தவீடுவளவை ஈடுவைத்து அரசாங்கத்திடம் 18,800 ரூபா கடன் பட்டிருக்கிருேம். இதுதவிர தனிப்பட்ட கடன்களும் உண்டு' என்று [illegible]

[6-ம் பக்கம் பார்க்க]

## ஒளிவு, மறைவு வேண்டாம் உண்மையைக் கூறுங்கள்'

### எதிர்ப்பிரசாரத்தை முறியடிக்க பிரதமருக்கு நாகநாதன் யோசனை

யாழ்ப்பாணம், புதன்





''மாவட்டசபைகள் சம்பந்தமாக ஒளிவு மறைவு எதற்கு?'' என்று நல்லூர் எம்.பி. யும் தமிழரசுக்கட்சித்தலைவருமான டாக்டர் இ.எம்.வி.நாகநாதன் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவை கேட்டுள்ளார். 'மாவட்ட சபைகள்' அமைப்பது அரசாங்கம் ஏற்றுக் கொண்ட உறுதியான கொள்கை என்பதும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையென்றும் டாக்டர் நாகநாதன், பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில்குறிப்பிட்டிருக்கிருர்.

'மாவட்டசபைகள் பற்றி ஒவ்வொரு உபதேர்தல் பிரசாரத்திலும் எதிர்க்கட்சியினர்தவருனமுறையில்' மாவட்டசபைகள்' பற்றி பிரசாரம் செய்வதும் பிரதமரும் சகாக்களும் ஒன்றும் செய்ய முடியாமலிருப்பதும் உண்மை' என்று டாக்டர் நாகநாதன்தமது கடிதத்தை ஆரம்பிக்கிருர்.

அடுத்தடுத்து இரண்டு சிம்மாசனப் பிரசங்கங்களிலும்நீங்கள் ஒப்புக்கொண்ட அரசாங்கத்தின் உறுதியான கொள்கைதான் 'மாவட்ட சபைகள்'என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை. இதைதினசரிப்பத்திரிகைகள் குறிப்பிடுகின்றனவோ இல்லையோ 'நாய்க்கு விசர்ப்பட்டம் கட்டி அதைக்கொல்லு' என்பது போன்று எதிர்க்கட்சியினரும் அவர்களது பிரசுரங்களும் 'மாவட்டசபைகள்' பற்றி பிரசாரம்செய்து வருகின்றனர். நீங்கள்

[6-ம் பக்கம் பார்க்க]

## கல்முனைக்கு நாளை பிரதமர் செல்வார்?

### திருச்செல்வம, முகமது நேற்றுச் சென்றனர்

கொழும்பு, செவ்.

இம் மாதம் 27-ந்திகதி வியாழக்கிழமை அம்பாறைக்கு விஜயம் செய்யும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கல்முனைக்கும் செல்வாரென்றும் அறியப்படுகிறது. இருசமூகங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள மனக்கசப்பை நீக்கி மீண்டும் சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதில் பிரதமர் நேரடியாக ஈடுபட்டு முயற்சிசெய்வாரெனத் தெரிகிறது. இதற்கிடையில் இன்றுகாலை தொழில் அமைச்சர் எம். எச். முகம்மதுவும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வமும் இன்று கல்முனைக்கு பிரயாணமானுர்கள். இன்று அல்லது நாளை திரும்பிவரும் இவ்விரு அமைச்சர்களும் சமர்ப்பிக்கவிருக்கும் அறிக்கையைத் தொடர்ந்து பிரதமர் தமது கல்முனைவிஜயத்தில் சில நடவடிக்கைகளை

(6-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு "இராணுவ ஆட்சி"

### மாற்றம் தேவை என பிரதமருக்கு நல்லூர் எம். பி. கடிதம்

யாழ்ப்பாணம், புதன்

வடக்கிலும் கிழக்கிலும் நடந்துவரும் இராணுவ ஆட்சியை விசாரணைக் கமிஷன் மூலம் தீர விசாரணை செய்த பின்னர் முற்றாக மாற்றியமைக்க வேண்டும் என்று நல்லூர் எம். பி. யும் தமிழரசுக்கட்சித்தலைவருமான டாக்டர் இ. எம். வி. நாகநாதன் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தெய்வத்தின் பெயரை உதட்டளவில் சொல்லுவதால், கடவுளுடைய ராஜ்யம் வந்துவிடுமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. நமது நடத்தை, சைத்தானின் பாதையிலன்றி தெய்வீக வழியில் செல்லுவதாக இருக்கவேண்டும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஸு
சித்திரை மீ 13வ. (26-4-67)

## விண்வெளிவீரர் தியாகம்

விண்வெளி யாத்திரை சென்ற சோவியத் விண்வெளிவீரர் குமரோவ், பூமிக்குத்திரும்புகையில் ஏற்பட்ட விபத்தில் கொல்லப்பட்ட செய்தி கவலையையும் அதிர்ச்சியையு மளிப்பதாகும். சந்திரனைச் சாடும் பெரும்பணியில் சில மாதங்களுக்கு முன்னர் மூன்று அமெரிக்க விண்வெளிவீரர்களும் தங்கள் உயிர்களைப் பலிகொடுத்திருக்கின்றனர். 'வானிலேறி விண்ணையும் சாடவும்' 'சந்திரமண்டலத்து இயல்கண்டு தெளியவும்' தங்கள் உயிரை அர்ப்பணித்துள்ள இந்த வீரர்களுக்கு நாமும் சிரம் தாழ்த்தி அஞ்சலிசெய்கிறோம்.

தீமையிலும் நன்மையுண்டு என்பதற்கிணங்க, குமரோவின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்து அமெரிக்க விண்வெளித் திட்டக் கழகத் தலைவர் அனுப்பியுள்ள செய்தியில் விண்வெளிப் பிரயாணத்தில், சந்திரமண்டல யாத்திரையில் சர்வதேச ஒத்துழைப்பின் அவசியத்தைத்தெரிவித்திருக்கிறார். அமெரிக்க அதிபர் ஜோன்ஸனும் விண்வெளிப் பிரயாணத்தில் சர்வதேச ஒத்துழைப்பை விரும்புகிறாராம். சந்திரமண்டல பிரயாணத்தில் சர்வதேச ஒத்துழைப்பு அவசியமென்பதை இதற்கு முன்னரும் பலரும் எடுத்துக்கூறியிருந்தனர். 'ஆசைக்கோர் அளவில்லை அகிலமெலாம் கட்டியாளினும்' என்று தாயுமானவர் கூறியது போல் தரையையும் கடலையும் ஆக்கிரமிப்பதில் ஈடுபட்ட வல்லரசுகள்சந்திரமண்டலத்தையும் ஆக்கிரமிக்கும் போட்டியில் ஈடுபட்டதால்தான் விண்வெளிப் 'பிரயாணத்தில் ஒத்துழைப்புக்கு இடமில்லாமல் போயிற்று. குறுகிய தேசியமனப்பான்மையினுல்தான் அண்டவெளி யாத்திரைத் திட்டங்களையும் ஆராய்ச்சிகளையும் பரம ரகசியமாக வைத்து அவை அகில உலகுக்கும் பயன்படமுடியாது வல்லரசுகள் செய்து வருகின்றன. சர்வதேசிய மனப்பான்மையுடன் அமெரிக்காவும் சோவியத்யூனியனும் ஒத்துழைத்து விண்வெளித்திட்டம் அகில உலகுக்கும் பயன்படுவதற்கு சோவியத்அமெரிக்க விண்வெளி வீரர்களின் உயிர்த்தியாகம் வழிகாட்டவேண்டும்.

## மாலுமிகள் கஷ்டம்

நெடுந்தீவு, செவ்.

நெடுந்தீவுத்துறைமுகத்தை சுட்டிப்பாகக்காட்டுவதற்காக துறைமுகக் கடற்கரையில் உள்ள கோரியெளிச்சம் மங்கலாக இருப்பதால் நெடுந்தீவுக் இரவு வேளைகளில் வரும் மோட்டார் வள்ளங்கள் பாதையைச்சரியாகக்கண்டு கொள்ள முடியாது கஷ்டப்பட்டுவருகின்றன. நன்ருகக் கரைக்கு வந்தபின்புதான் இவ்வெளிச்சம் தெரிவதாகவும் இப்படி இருப்பதிலும் இல்லாமல் இருக்கலாமென்றும் மாலுமிகள் கூறிக்கொள்கிருர்கள்.

## வழுக்கையை போக்கலாம்

வாஷிங்டன், ஏப். 25

வழுக்கைத் தலையர்களுக்கோர் நற்செய்தி. ஆப்ரேஷன் ஒன்றின்மூலம் வழுக்கைத்தலையை முடியுள்ள தலையாக்கலாமென்பதை ஆப்ரேஷன் ஒன்றின் மூலம் பரீட்சித்து வெற்றி கண்டிருக்கிருர் அமெரிக்க டாக்டர் குளுக்கோஸ்.

## பல்வைத்திய நிபுணர்

ஆஸ்பத்திரிகளில் நோயாளிகள் தொகை அதிகரித்து வருவதால் தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்துகொள்ளக்கூடிய வசதியுடையவர்கள் தனிப்பட்டமுறையில் தொழில்செய்யும் டாக்டர்களை நாடுகின்றனர். இந்த டாக்டர்கள் மூலம் வைத்தியநிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கும் இப்போது வாய்ப்பிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலும் வைத்திய நிபுணர்கள் பலர் தனிப்பட்ட முறையில் தொழில் புரியும் வைத்தியர்கள்மூலம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் நேரம் தவிர்ந்த சமயங்களில் நோயாளர் பலருக்குத் தங்கள்சேவை கிடைக்கச் செய்கின்றனர். ஆனுல் இந்த வசதியும் வாய்ப்பும் இங்குள்ள பல்வைத்திய நிபுணர்களுக்குக்கிடையாது. யாழ்ப்பாணப்பகுதியில் ஆறு பல்வைத்திய நிபுணர்கள் தான் கடமையாற்றுகின்றனர். ஆஸ்பத்திரிகளுக்கு தினசரி செல்லும் பல்நோயாளர் அத்தனைபேருக்கும் இவர்கள் சிகிச்சையளிக்கமுடியாமலுள்ளது. பலர் திரும்பிச்செல்லவும் நேரிடுகிறது. இந்தபல்வைத்திய நிபுணர்களும் இதரவைத்திய நிபுணர்கள் போன்று கடமை நேரம் தவிர்ந்த சமயங்களில் தனிப்பட்ட முறையில் சேவைசெய்யும்வாய்ப்பு அளிக்கப்பட்டால் வசதியுடைய பல்நோயாளர், அவர்களின் சேவையைப் பெறமுடியும். ஆஸ்பத்திரிகளில் பல்நோயாளர் நெருக்கடியும் குறையலாம். வைத்திய நிபுணர்களுக்கிடையிலுள்ள பாகுபாடு நீங்கும்; பல்வைத்திய நிபுணர்களும் திருப்தியுடன் தங்கள் கடமையைச் செய்வர்.

இதேசமயம் ஆஸ்பத்திரிகளில் பல்வைத்திய நிபுணர்கள் சிலரை மேலும் நியமித்து பொதுமக்கள் கஷ்டமின்றி சிகிச்சைபெற நடவடிக்கை எடுக்கவேண்டும். பல்வைத்திய நிபுணர்களின் குறைகளை விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள கமிஷன் இவைபற்றிக் கவனம் செலுத்துமென்று எதிர்பார்ப்போம்.

ஆசிரியருக்கு கடிதம்

## பண் இசைக்கு இடம் அளியுங்கள்

யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் இசை விழாக்களில் பண்இசை பாடுபவர்களுக்கு இடங்கொடுப்பதில்லை என்ற புகார் பலகாலமாக இருந்து வருகிறது. பண்ணிசைமுறைப்படி பாடக்கூடிய வித்துவான்கள் எங்கள் மத்தியில் எத்தனையோ பேர் இருக்கிருர்கள். இவர்களுக்கு இசை விழாக்களில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைப்பதில்லை இசைவிழாக்களில் பாடுகின்ற சங்கீத பூஷணங்களும் சரி, பண்ணிசைபாடுகிருர்களோவெனில் அதுவுமில்லை பண்ணிசை பாடுகிறவர்களைப்பார்த்து இதென்ன தேவாரம் தானே என்று ஏளனமாகக்கேட்கும் பழக்கமும் வந்துவிட்டது.

இங்குள்ள சங்கீதபூஷணங்களுக்குத் தேவாரத்திலோ, மற்றும் திருமுறைகளிலோ அவ்வளவு அக்கறையில்லை ஆனுலும் தேவாரப் பண் இலேசாகப் படிக்கக்கூடியது என்றும், இசை உலகில் அதற்கு அவ்வளவு மதிப்பில்லை என்றும் நினைத்துவிடுகிருர்கள். தேவாரப் பண் பாடும்படி அவர்களை வற்புறுத்திக் கேட்டுவிட்டால் பாடுவார்கள். எப்படிப்பாடுகிருர்கள் என்ருல் பண்முறைப்படி பொருத்தமான இராகத்திற்கும் பாடாமல் இராகத்தை மாற்றிப்பாடுகிருர்கள். இப்படி மாறிப்பாடுதல் பண்மரபுக்குப் பிழையானது என்பது அவர்களுக்குத்தெரியாதுபோலும். இசைவிழாக்களில் பாடுவோர்கள் செவிக்கின்பம் அளிக்கலாம். ஆனுல் பண் இசை பாடினுலன்றி உயிர்க்கின்பம் அளிக்கமாட்டார்கள். இந்தக்குறையை நீக்க இசைவிழாக்களில் பண்ணிசை நிகழ்ச்சிகளுக்கும் முக்கிய இடம்கொடுக்க வேண்டும்.

—'சைவாபிமானி
-இசைச்செல்வன்'

## குற்றத்தடுப்பு இயக்கம்ஆரம்பம் பொலிஸ் பொதுமக்கள் ஒத்துழைப்பு

மானிப்பாய், புதன்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உத்தரவின் பேரில் ஒவ்வொரு பொலிஸ் பகுதியிலும் குற்றத்தடுப்பு பிரசாரம் செய்வதில்பொலிசாரும் பொதுமக்களும் கூடுதலாக ஒத்துழைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள பொலிஸ் சுப்பிரிண்டன்மார் பல வழிவகைகளைக் கையாளுகின்றனர்.

வடமாகாண பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் முயற்சியால் ஆனைக்கோட்டைப் பொலிஸ் பகுதியில் இவ்வியக்கத்தின் ஆரம்பம் நடக்கவிருக்கிறது. இப்பகுதியில் ஆனைக்கோட்டை, மானிப்பாய், நவாலி, சுதுமலை, கொக்குவில் ஆகிய கிராமங்கள் அடங்கும். குற்றஎதிர்ப்பு வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கும் பொதுப் பிரசாரக் வட்டங்களை நடத்துவதற்கும் இப்பகுதியிலுள்ள சில பிரமுகர்களும் பொலிஸ் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு சபையை ஆனைக்கோட்டைப் பொலிசார் அமைத்துள்ளார்கள்.

திடகாத்திரமுள்ள வாலிபர்கள் எல்லோரையும், [பிரதானமாகப் படித்து கூட்டு வேலையற்றிருக்கும் வாலிபர்களை] ஒன்றுகூட்டி விளையாட்டுகள் நுண்கலைகள், சிறு குடிசைக் கைத்தொழில்கள், சமூகசமயநடவடிக்கைகள் முதலிய க்ஷேமலாப வேலைகளில் அவர்களுடைய சக்தியையும் உற்சாகத்தையும் ஈடுபடுத்துவதற்கு திட்டவட்டமான முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று இச்சபை தீர்மானித்திருக்கிறது.

இவ்விஷயங்களை ஆராயும் முகமாக பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் தலைமையில் இன்று புதன்கிழமை மாலை 5 மணியளவில்மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். ஆனைக்கோட்டை பொலிஸ் பகுதியிலுள்ள பல பிரமுகர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

## தண்ணீர்வரிக்கு ஆட்சேபம்

நெடுந்தீவு, செவ்.

நெடுந்தீவின் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு என அண்மையில் ஆரம்பித்துவைத்த குழாய் நீர் திட்டம் குடிதண்ணீர்ப் பஞ்சத்தைப்பெரிதும் போக்கியுள்ளது. ஆனுல் தற்போது நெடுந்தீவுக் கிராம சபை குழாய்மூலம் தண்ணீர் பெறுபவர்களை மே முதல் திகதியிலிருந்து வரிகட்டுமாறு முன் அறிவித்தல் விடுத்துள்ளது. இதனை இங்குள்ள மக்கள் பலமாக எதிர்த்து வருகிருர்கள் ஆட்சேபக் கூட்டங்களும் வைக்க ஆயத்தங்கள் நடப்பதாக அறியப்படுகிறது. இங்குள்ள பல சைக்கிள்களும் மாட்டு வண்டிகளும் வரியிறுக்காதவை [illegible] கும்.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அகில இலங்கை சைவ மகாநாட்டுக்கு திரு. வஜ்ரவேலு முதலியார் வருவாரென்று எதிர்பார்த்து அவர் பேச்சைக்கேட்க ஆவலுடன் சென்றேன். ஆனுல் அவர் வரவில்லை என்று அறிய ஏமாற்றமாக இருந்தது.

முதல் நாளன்று திருச்சியிலிருந்து வருவதாக தந்தி அடித்திருந்தார். அவரை வரவேற்பதற்காக பலாலி விமான நிலையத்துக்கு மூன்று கார்களில் சைவ மகாநாட்டுப் பிரதிநிதிகள் சென்றிருந்தனர். அவர் அன்று விமானத்தில் வரவில்லை. திருச்சி விமான காரியாலயத்துக்கு டெலிபோன் பேசியதில் முதலியாரின் பெயர். ''வெயிட்டிங் லிஸ்ட்''டில் முதலாவதாக இருப்பதாகத் தெரியவந்தது

பின்னர் அவருக்கு ஓர் அவசரத்தந்தி அடித்து மூன்ரும் நாள் கூட்டத்துக்காவது வரும்படி கேட்டிருப்பதாயும், அநேகமாக வரலாமென்றும் தெரிவித்தனர். மூன்ரும் நாளும் சென்றேன். ஆனுல் அன்றும் அவர் வரவில்லை.

மகாநாடு முடிந்தாலும் அவரை வரவேண்டுமென்றும் இங்கு ஒரு மாதமிருந்து சைவசித்தாந்த வகுப்புகளை நடத்தவேண்டுமென்றும் கேட்டிருப்பதாக அறிந்தேன்.

ஃ ஃ ஃ

இந்தியா-இலங்கை போக்குவரத்தில் பல பல தடைகள் இருப்பதால், அங்கிருந்து யாரும் வருவதைப்பற்றி கடைசிவரை நிச்சயமாகக் கருதுவதற்கில்லை. என்ருலும் இவ்வித சமய சம்பந்தமான மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க வருபவர்களுக்கு எவ்வித தடையுமில்லாமல் சுலபமாக வரும்படி தக்க முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும். முன் ஒரு தடவையும் இதே மாதிரி ஒரு தடை ஏற்பட்டதாக ஞாபகம்.

தமிழகத்தில் பல சைவ ஆதீனங்களும், சைவ ஸ்தாபனங்களுமுள்ளன. அவற்றுடன் நெருங்கிய தொடர்புகொண்டு, அவர்கள் மூலம் இதற்கான ஒழுங்குகள் செய்தால், இவ்வித தடைகள் ஏற்படாமல் கூடுமானவரை செய்யலாம். இவ்விஷயத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலே மடாதிபதிகளனைவரும் சேர்ந்து தெய்வீகப் பேரவை அமைத்து, வெளிநாடுகளிலும் ஆத்திகத்தை வளர்ப்பதற்கான முயற்சி செய்வதாக அறிந்தேன். அந்தச்சபையுடனேயும் தொடர்புகொண்டு, இங்கு தெய்வீகத்தை வளர்க்க வேறு பல கூடுமான உதவிகளையும் பெறலாம். இந்தத் தடவை ஏற்பட்ட அனுபவம், இனி இவ்வித புதிய நெருங்கிய தொடர்புகளை வைத்துக்கொள்ள உதவுமாயின், இதுவும் ஒரு நன்மைக்காகவே இருக்கும்.

ஃ ஃ ஃ

பம்பாயிலே திரு. கிருஷ்ண மேனன் மீண்டும் தோற்றதைக்கேட்க வருத்தமாக இருந்தது. இந்தத் தேர்தல் முடிவு காங்கிரஸ் இன்னும் செத்துவிடவில்லை என்பதையும் அதற்கு உயிர் இருக்கிறதென்பதையும் காட்டுகின்றது.

இத்தேர்தலில் 'சிவசேனு' என்ற வகுப்புவாத பட்டாளம், மேனனுக்கு எதிராக துவேஷப்பிரசாரம் செய்து அவரது கார்களையும் நாசமாக்கியதாயும் செய்திகள் கூறுகின்றன. வடக்கு-தெற்கு துவேஷப் பிரசா

[4-ம் கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

ரத்தை நடத்தும் ஒரு ஸ்தாபனத்தை பம்பாய் அரசாங்கம் அனுமதிப்பது ஆச்சரியமே. சென்ற பொதுத் தேர்தலிலும் இதே புகார் எழுப்பப்பட்டது. காங்கிரஸ் அரசாங்கம் இதைத் தடுக்காதது அதன் புகழை உயர்த்தமுடியாது.

ஃ ஃ ஃ

அரித்த நம்பி அடிகை தொழுவார் நோய் ஆண்ட நம்பி முன்னை ஈண்டுலகங்கள், தெரித்த நம்பி ஒரு சேவுடை நம்பி சில்பலிக்கென்ற கந்தோறு மெய் வேடம், தரித்த நம்பி சமயங்களின் நம்பி தக்கன்தன் வேள்விபுக்கன்றிமையோரை, இரித்த நம்பி என்னை ஆளுடை நம்பி எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே.

—சுந்தரமூர்த்திநாயனுர்.

[உனது திருவடிகளைக் கைகளால் தொழுகின்றவரது துன்பங்களை அரித்தொழிக்கின்ற நம்பியே, நெருங்கிய உலகங்கள் பலவற்றையும் முன்பு ஆக்கிய நம்பியே, பின்பு அவற்றைக் காக்கின்ற நம்பியே, ஒற்றை எருதையுடைய நம்பியே, இல்லந்தோறும் சென்று ஏற்கும் சிவபிச்சைக்கென்று திருமேனியில் அதற்குரிய வேடத்தைப்பூண்ட நம்பியே, சமயங்கள் பலவற்றுக்கும் தலைவனுகிய நம்பியே, அன்று தக்கன் தன் வேள்விச்சாலையில் புகுந்து, ஆங்கிருந்த தேவரை எல்லாம் அஞ்சியோடச் செய்த நம்பியே, என்னை ஆளாக உடைய நம்பியே, நீயே எங்கட்கு எப்பிறப்பிலும் தலைவன்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரேவ் மரணத்துக்கு விசாரணைக் கமிஷன்

## ஜோன்ஸன், பாப்பரசர், வில்சன் அனுதாபச்செய்திகள் அனுப்பினர்

### 'சோவியத் வீரர்' தங்கப்பதக்கம்

மாஸ்கோ, ஏப். 25

நேற்று முன்தினம் ரஷ்ய விண்வெளிக் கப்பலான 'சோயிஸ்-1'ல் பிரயாணம் செய்கையில் கொல்லப்பட்ட சோவியத் விண்வெளி வீரர் குமரேவ்வின் மரணம் பற்றி விசாரணை செய்ய ஒரு கமிஷனை சோவியத் அரசாங்கம் நியமிக்குமென இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குமரேவ்வின் மரணச்செய்தி சோவியத் யூனியனெங்கும் பரவத் தொடங்கியதும், அதைக் கேள்வியுற்ற மக்கள் விம்மி அழுதனர்.

#### முதல் மரணம்

சந்திரனில் மனிதன் இறங்குவதற்கான முயற்சியில் ஈடுபட்ட விண்வெளி வீரர்களில், விண்வெளிக் கலத்தில் பிரயாணஞ் செய்கையிலேயே மரணமான முதல் விண்வெளி வீரர் குமரேவ்வே.

குமரேவ்வின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் செய்திகள் உலகின் பல பாகங்களிலுமிருந்து வந்து குவிந்தவண்ணமிருக்கின்றன. அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன், பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், பாப்பரசர் போல் ஆகியோரும் தமது ஆழ்ந்த அனுதாபங்களை சோவியத் அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

குமரேவ்வின் பூதவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்கென சோவியத் இராணுவ இல்லத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

#### வீரருக்குரிய பூரண மரியாதை

குமரேவ்வின் சடலம் ஒரு சோவியத் வீரருக்கான பூரண மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அவருடைய மரணத்தின் பின்னர் அவருக்கு 'சோவியத் வீரர்' என்ற ரஷ்யாவின் மிக உயர்ந்த பரிசான தங்கப்பதக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

குமரேவ்வின் மரணத்துக்கு அமெரிக்க விண்வெளி வீரர்கள் அனைவரும் தமது அனுதாபத்தை அனுப்பியுள்ளனர்.

#### ஒத்துழைப்பின் அவசியம்

சோவியத் விண்வெளி வீரரின் மரணம் பற்றிக் குறிப்பிடுகையில், இச்சம்பவம் இரு நாடுகளிடையேயும் வானவெளி ஆராய்ச்சித் துறையில் கூடிய ஒத்துழைப்பு அவசியமென்பதை வலியுறுத்துவதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

இறந்த விண்வெளி வீரர் குமரேவ் மனைவியையும், மகன், மகள் இருவரையும் விட்டுச் சென்றுள்ளார்.

---

## அமெரிக்க விமானங்கள் ஹனேய்க்கருகே தாக்குதல்

### விஸ்தரிப்பு நடவடிக்கை என செனட்டர் கண்டனம்

சைகோன், ஏப். 25

அமெரிக்க ஜெட் விமானங்கள் நேற்று ஹனேய்க்கருகேயுள்ள வடவியட்னும் 'மிக்' விமானத்தளங்கள் மீது முதற்தடவையாகத் தாக்குதல் நடாத்தின. இரண்டு 'மிக்' விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலை, அமெரிக்க செனட்டர் மான்ஸ்பீல்ட், வியட்னும் போரை விஸ்தரிக்கும் மற்றுமொரு நடவடிக்கையெனக்கண்டித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற விமானப்போரில் மொத்தம் 9 அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக வடவியட்னும் அறிவித்துள்ளது.

#### சோவியத் எதிர்ப்பு

சுவிட்சர்லாந்தும் வியட்னும் போரில் பங்குபற்றுவதாக சோவியத் யூனியன் ஆட்சேபித்து, அந்நாட்டுக்கு ஓர் எதிர்ப்புக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது. சில தினங்களுக்கு முன், இதே குற்றச்சாட்டை ஆஸ்திரேலியா மீதும் சோவியத் யூனியன் சுமத்தியிருந்தது.

---

## கிரேக்க மன்னரின் உண்மை நிலை மர்மமாகவே இருக்கிறது

எதென்ஸ், ஏப். 25

கிரேக்க மன்னர் கொன்ஸ்டன்டைன் கைது செய்யப்பட்டுள்ளாரென்ற செய்தியை, கிரீஸில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள இராணுவம் மறுத்துள்ளது. இங்கு ஒலிபரப்பப்பட்ட வானொலி செய்தியொன்றில், இவ்வாரம் நடைபெறவிருக்கும் மந்திரிசபைக் கூட்டத்துக்கு மன்னர் தலைமை வகிப்பாரென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கிரேக்க மன்னரின் உண்மை நிலைமை அறியும் பொருட்டு, இங்குள்ள பிரிட்டிஷ், அமெரிக்க தூதுவர்கள் நேற்று கொன்டன்டைனைச் சந்தித்துப் பேசினர். ஆனால், இச்சந்திப்பில் அரசர் எதையும் வெளிபிடவில்லை.

கிரீஸில் இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தும் பத்திரத்தில் காணப்பட்ட மன்னரின் கையொப்பம் கள்ளக் கையொப்பமாகவே இருக்கவேண்டுமென பிரிட்டிஷ், அமெரிக்க தூதுவர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

---

## இந்தோனேஷிய-சீன உறவு சீர்குலைவு

பீகிங், ஏப். 25

இந்தோனேஷியாவுக்கும் சீனுவுக்குமிடையேயான உறவுகள் மோசமடைந்து வருகின்றன. சமீபத்தைய சம்பவங்கள் இதனையே எடுத்துக்காட்டுகின்றன.

பீகிங்கிலுள்ள இந்தோனேஷிய தூதரக பொறுப்பதிகாரியையும் அவரது உதவியாளர் ஒருவரையும் விரும்பத்தகாத நபர்கள் எனச் சீன அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. இம்மாதம் 3.ம் திகதிக்கிடையில் இருவரும் சீன நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தோனேஷியாவில் இந்தோனேஷிய இளைஞர்கள் அங்குள்ளசீனப் பிரஜைகளுக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். அவர்களைக் கண்ட இடங்களிலெல்லாம் தாக்கவும் செய்தனர்.

இந்தோனேஷியாவில் கடமையாற்றிய சீனத்தூதரகப் பொறுப்பதிகாரியையும் அவரது உதவியாளர் ஒருவரையும் இந்தோனேஷியாவிலிருந்து வெளியேறுமாறு இந்தோனேஷிய அரசாங்கம் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது. இந்தோனேஷியாவுக்கெதிராகச் சதிநடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

#### பதில் நடவடிக்கை

சீனு இப்போது எடுத்துள்ள நடவடிக்கை இதற்குப்பதிலாகவே அமைந்துள்ளது.

நேற்றுப் பீகிங்கிலிருந்து வெளியான செய்திகள் அங்குள்ள இந்தோனேஷியத் தூதரகத்துக்கு முன்னால் சீன மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததாக அறிவிக்கின்றன. இந்தோனேஷியாவில் சீனப் பிரஜைகள் தாக்கப்பட்டதை எதிர்த்தே இவ்வார்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன.

---

## சக்ளா பாரிஸ் சென்றார்

ஜெனிவா, ஏப்ரல் 25

இந்திய வெளியுறவு மந்திரி திரு. சக்ளா இங்கிருந்து பாரிசுக்கு இன்று புறப்பட்டார்.

---

## உணவில் தேசிய கொள்கை அவசியம்

### ஜெயப்பிரகாஷ் நாராயண் வெளியிடும் கருத்து

ஹைதராபாத், ஏப். 25

தேசிய உணவுக்கொள்கை ஒன்றை அரசாங்கம் உருவாக்குவதன் அவசியத்தை சர்வோதய தலைவர் திரு. ஜெய்பிரகாஷ் நாராயண். இங்கு ஒருகூட்டத்தில்பேசும் போது வலியுறுத்தினர்.

நாடு முழுவதும் உணவு தான்யங்களைச் சமமாக அளிப்பதற்கான திட்டமொன்றும் அமைக்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் தேசிய உணவுக் கொள்கைஒன்றைஉருவாக்க மத்திய அரசாங்கத்துக்குத் தடையாகவிருப்பது கட்சி அரசியலேயாகுமெனவும் அவர் கூறினர். பொருளாதாரத்துறையிலும் இதே கட்சி அரசியல் தான் முன்னேற்றத்துக்குத் தடையாகவிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த பொதுத் தேர்தலில் கட்சிகள் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றியிருப்பது, நிலைமையை மேலும்சிக்கலாக்கவே உதவியுள்ளதென்றுர் அவர்.

இன்றைய சூழ்நிலையில், காந்திய அடிப்படையில் அமைந்த பொருளாதாரமே சிறந்ததென திரு. நாராயண் கூறினர்.

---

## பிரஷ்னேவ் கோரிக்கை

காளோ வாரி, ஏப்ரல் 25

அமெரிக்கா மத்தியதரைக் கடலிலிருந்து தனது 6 வது கடற்படையை வாபஸ் பெறவேண்டுமென சோவியத் அதிபர் பிரஷ்னேவ், இங்கு கூடியுள்ள கிழக்கு, மேற்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகள் மாநாட்டில் பேசுகையில் கோரியுள்ளார். அத்துடன், ஐரோப்பாவிலுள்ள இராணுவத்தளங்களையும் அமெரிக்கா எடுத்துவிட வேண்டுமென அவர் வலியுறுத்தினர்.

---

## அந்நிய நிருபர்கள் அனுமதிக்கப்படார்

நாம் பென், ஏப்ரல் 25

கம்போடியாவுக்குள் அந்நிய நிருபர்கள் யாரும் வரக்கூடாது. என அறிவிக்கப்பட்டுள்ளது, கம்போடியாவுக்கு வரும் அந்நிய நிருபர்கள், கம்போடியாவுக்கெதிரான மனப்பான்மை கொண்டுள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்றும், அவர்கள் கம்போடியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும், கம்போடிய நாட்டுத் தலைவர் இளவரசர்நொரோடம் சிஹானுக் அறிவித்துள்ளார்.

---

## பிராந்திய மொழி தான்கல்விமொழி

புதுடில்லி, ஏப்ரல் 25

பிராந்திய மொழியே கல்வி மொழியாக இருக்க வேண்டுமென்று, கல்வி பற்றிய இந்திய பாராளுமன்ற உறுப்பினர்களின் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

இவ்விஷயம் பற்றி உடனடியாகக் கவனம் செலுத்தப்படவேண்டுமென்று கமிட்டி குறிப்பிட்டுள்ளது.

---

## பல்கேரியாவுக்கு இந்திரா காந்தி

புதுடில்லி, ஏப்ரல் 25

தற்போது இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பல்கேரியத் துணைப்பிரதமர் திரு. ஸ்வெலொவ், இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை பல்கேரியாவுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளார். திருமதி இந்திரா காந்தி அவ்வழைப்பை ஏற்றுள்ளார்.

---

## பெல்கிரேடில் பிரவுண்

பெல்கிரேட், ஏப். 25

பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண், யூகோஸ்லேவியாவுக்கு வந்து சேர்ந்துள்ளார். அவர் தமது விஜயத்தின்போது, யூகோஸ்லேவியத் தலைவர்களுடன் பல முக்கிய பிரச்னைகளையிட்டு விவாதிப்பார்.

---

## ஐரோப்பிய பொதுசந்தையில் பிரிட்டன்

### அடுத்தவாரம் முடிவுதெரியலாம்

லண்டன், ஏப். 25

ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டனும் சேர்வதுபற்றிய இறுதி முடிவு, அடுத்த வாரத்துக்குள் எடுக்கப்படுமெனத் தெரிகிறது.

அடுத்தவாரத்தில் பிரிட்டிஷ் மந்திரிசபை மூன்றுதடவைகள் கூடுமென்றும், இக்கூட்டங்களின் முடிவில், இறுதித்தீர்மானம் எடுக்கப்படுமெனவும் கூறப்படுகிறது.

---

## 'அரசாங்கத்தை வசைபாடாதீர்; தொழிலில் இறங்குங்கள்'

### பட்டின சபைத்தலைவர் இளைஞர்க்கு அழைப்பு

சங்கானை, செவ்வாய்

"வேலையற்றிருக்கும்வாலிபர்கள் அரசியல் குரோதங்களைப் பெரிதுபடுத்தி பேசித்திரிவதில் காலத்தைக் கழிக்கக்கூடாது. வேலையில்லையென்று அரசாங்கத்தை வசைபாடிக்கொண்டிருப்பதிலும் பார்க்க தாமாகவே முயற்சிசெய்து ஒரு சிறு தொழிலிலாவது ஈடுபட வேண்டும். உள்ளூர் உற்பத்திகளை நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஆதரிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மை கிடைக்கும்" என்று சங்கானைப் பட்டின சபைத்தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் சங்கானையில் சவர்க்காரத் தொழிற்சாலையொன்றை நேற்றுமுன்தினம் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

ஒருதொழிலை ஆரம்பிப்பதற்குநம்மிடம்மூலதனமோ, மூலப்பொருட்களோ இல்லையென்று எண்ணி காலத்தைக் கழிப்பதைவிட்டு குடிசைக்கைத்தொழில்மூலம் ஒரு சிறு முயற்சியாவது செய்யவேண்டும். இதற்கான ஆலோசனைகளைப்பெறுவதற்கு குடிசைக்கைத்தொழில் இலாகா இருக்கிறது.

மற்றும் திருவாளர்கள் மு. சிவானந்தம், பொ. நாகரத்தினம் ஆகியோர் பேசினர். திரு. த. துரைசிங்கம் நன்றிகூறினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விவசாயப்படை அமைப்பு வேலைக்கு 10 லட்சம் ரூபாய்

கொழும்பு, செவ்வாய்

விவசாயப்படை அமைப்பு வேலைகளுக்காக அரசாங்க நிதியிலிருந்து பத்துலட்சம் ரூபாய் கடனுதவியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப்பத்து லட்சம் ரூபாயும் விவசாயப் படையின் நிர்வாகச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படும்.

மூன்று விவசாயப்படை முகாம்கள் அடுத்தவாரத்தில் அமைக்கப்படவிருப்பதாக காணி அமைச்சு அறிவித்திருக்கிறது.

மினிபே, தில்போவெவ, ராஜாங்கன ஆகிய இடங்களில் நிறுவப்படவிருக்கும் இந்த விவசாயப்படை முகாம்களில் ஒவ்வொரு முகாமுக்கும் 345 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இவ்வருடமுடிவுக்குள், 45 விவசாயப்படை முகாம்கள் அமைக்கப்படுமென்றும், 15,000 பேர் இவைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களென்றும் தெரியவருகிறது.

# 'அலையரசி' சேவை ஆரம்பம்

நெடுந்தீவு, செவ்.

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கு மிடையேயான படகுசேவை கடந்த பலமாதங்களாகச் சீர்குலைந்து இருந்தது. இச்சேவையில் மூன்று மோட்டார் படகுகள் அமர்த்தப்பட்டிருந்தன. ஆனால் சேவை சீர்கேடாக இருந்ததால் புதிதாக மோட்டார் வள்ளம் ஒன்று பொது மராமத்து இலாகாவால் கட்டப்படவேண்டுமென காலஞ்சென்ற தீவுப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. கந்தையாவும், இங்குள்ள சங்கங்களும் சிலவருடங்களுக்குமுன் வற்புறுத்திவந்தன. அதன் பலனாக 'அலையரசி என்ற மோட்டார் வள்ளம் நெடுந்தீவு சேவைசெய்ய ஆரம்பித்துள்ளது. முதலாம் இரண்டாம் வகுப்புகளை யுடைய இம் மோட்டார் வள்ளத்தில் மலசலகூடங்களும், பிரயாணிகளின் பொருட்களை வைப்பதற்குப் புறம்பான இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது. 60 பிரயாணிகளை ஏற்றுவதற்கு மட்டும் தான் அனுமதிவழங்கப்பட்டுள்ளது. இதுவே தபால் பைகளையும் எடுத்துச்செல்கிறது.

## இறக்குமதியில் வெட்டு

கொழும்பு, செவ்.

அடுத்த ஐந்தாண்டுகளில் இறக்குமதிப் பொருள்களில் பெருமளவு குறைப்புச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சர்வதேச சகாயநிதியிடமிருந்து இலங்கை பெற்ற பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டியிருப்பதாகவும் இன்னும் பல காரணங்களாலுமே இவ்விதம் இறக்குமதிகளில் குறைப்புச் செய்ய வேண்டியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## "ஐக்கியமாக வாழ..."

உடுப்பிட்டி, செவ்.

"இளைஞர்களிடையே விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதைவிடச் சிறுபிள்ளைகளிடையே இம் மாதிரிப் போட்டிகளை நடாத்துவது வரவேற்கக் கூடியது. இதனால்சிறுபிள்ளைகள் தமது பால்யப் பிராயத்திலேயே போட்டி மனப்பான்மையையும், இனத்துவேஷத்தையும் போக்கிச் சமூகத்தில் ஐக்கியமாக வாழக் கற்றுக் கொள்கிறார்கள்" என்று கரணவாய் சிறுவர் வர் முன்னேற்றக் கழகத்தின் 2-வது ஆண்டுவிழாவும் விளையாட்டுப் போட்டிகளும் திரு. க. இராசகுலசிங்கம் தலைமையில் கரணவாய் தெற்கு வெள்ளச்சியாவளவு வயிரவர் கோவில் மைதானத்தில் நடைபெற்றபோது பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட திரு. வீ. தனபாலசிங்கம் [illegible] தலைமையில் கூறினர்.

## யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி பிரவேசப் பரீட்சை

உடுப்பிட்டி, செவ்.

யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிக்கான பிரவேசப்போட்டிப் பரீட்சை வரும்29-ம்,30-ம்திகதிகளில் நடாத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தகம், வியாபாரம், எந்திரவியல், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகிய துறைகளில் பயிற்சி பெறுவதற்கு மனுப்பண்ணியிருக்கும் சுமார் 2500 பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் தோற்றவிருப்பதாக அறியப்படுகிறது.

## தட்டுப்பாடு விரைவில்நீங்கும்?

கொம்பனித்தெரு, செவ்.

நாட்டிலுள்ள சகல ஹோட்டல்களுக்கும் உப உணவுப் பொருட்களான மிளகாய், மல்லி போன்றவற்றை அடுத்த மாதத்தில் இருந்து தட்டுப்பாடின்றி விநியோகிப்பதற்கு உணவுப்பகுதியினர் துரித நடவடிக்கை எடுத்துவருவதாக உணவு இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறினர்.

## அப்பம்கொடுத்து காப்பு அபகரிப்பு

சுழிபுரம், செவ்.

கையில் காப்பு அணிந்திருந்த பிள்ளை ஒன்றை தூக்கிச்சென்று பிள்ளைக்கு ஆசைவார்த்தைகாட்டி அப்பம் கொடுத்து கையில் இருந்த காப்பை அடைவு வைத்து பணம் வாங்கிய சம்பவம் ஒன்று இப்பகுதியில் நடைபெற்றுள்ளது. இச் சம்பவத்தோடு சம்பந்தப்பட்ட மூவர் பொலிசாரின் விசாரணைக்குள்ளாகியுள்ளனர். ஐவர் பொலிசாரால் தேடப்படுகின்றனர்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் வாலிபர் சங்க நாவலடி சன சமூக நிலையத்தில் வருடாந்தக் கூட்டம் திரு. சி. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை கலந்து கொண்டார். புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: சி. சிற்றம்பலம். உபதலைவர்: வ. சுப்பிரமணியம், தனதிகாரி: ஆ. சுப்பிரமணியம், காரியதரிசி: க. சதானந்தம், உபகாரியதரிசி: மா. சிவராசா. நான்கு பேர்கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்ரசிகரஞ்சன சபா நடாத்தும் இசைவிழாவின் எட்டாம் நாளான இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

5-30—6-45 —எம். பஞ்சாபிகேசன், எஸ். ஏ. பாலசுதந்திரன்- நாதஸ்வரம், கே. எம். நடராஜசுந்தரம், ரி. என். சுப்பிரமணியம் - தவில். 6-45 — 800 உரும்பராய் பொ. புஷ்பரத்தினம் - பாட்டு, எஸ். சர்வேஸ்வரசர்மா - வயலின், எஸ். சுப்பிரமணிய ஐயர் - மிருதங்கம். 8-00—8 15 தலைமையுரை திருமதி ஆர். ஆர். நவரத்தினம், 8-15 — 9-30 பரம் தில்லைராஜா-பாட்டு. ஜி. சண்முகானந்தம் -வயலின், ஏ. கணேசசர்மா- மிருதங்கம். 9-30-10-45 எம். ஏ. கல்யாண கிருஷ்ண பாகவதர் செல்வி முத்துலட்சுமி கல்யாண கிருஷ்ணன் வீணை, ஏ. எஸ். இராமநாதன் மிருதங்கம், குமுக்கா கே. எம். கணபதியாபிள்ளை [கெஞ்சிரா], கே. கோவிந்தபிள்ளை [கெஞ்கிரா], சுந்தரமூர்த்திஐயர் [கடம்]செல்வன்எம். இராமநாதன் கொன்னக்கோல் ஆகியோரும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவர்.

## "வடபகுதி பயன்படுத்த வேண்டும்"

உடுவில், செவ்வாய்

"மனிதன் உணவின்றி வாழுவதென்பது முடியாத காரியம். உணவின் மகத்துவத்தை நாம் இன்று உணரக்கூடிய நிலையில் இருக்கின்றோம். தேசிய அரசாங்கம் உணவைப் பெருக்க பல திட்டங்களையும், வசதிகளையும் செய்துள்ளது. வடபகுதியில் வாழும் தமிழ் மக்கள் உணவு உற்பத்தி இயக்கத்தைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்" என்று அளவெட்டி கலாசேவா சனசமூகநிலையத்தின் 24-வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய வலிகாமம் வடக்குப் பிரிவுக் காரியாதிகாரி திரு. த. முருகேசம்பிள்ளை குறிப்பிட்டார்.

மேற்படி ஆண்டுவிழாவுக்கு பண்டிதர் எஸ். சின்னத்துரை தலைமை வகித்தார். மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.

## ஐந்து பிள்ளைகளின் தந்தை தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

நச்சுத்திராவகம் அருந்தப் போவதாகப் பல நாட்களாகக் கூறிக்கொண்டு வந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையொருவர் நச்சுத்திராவகம் அருந்தி மரணமானார்

மரணமான யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு வீதியைச் சேர்ந்த இராமு மார்க்கண்டுவின் [26 வயது] மரணம் சம்பந்தமாக திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினர்.

சம்பவம் நடந்ததினத்தன்று நண்பகல் ஒரு மணியளவில் மரணமான தனது கணவன் கையில் கிருமிநாசினி போத்தலுடன் வீட்டுக்கு வந்து தான் கிருமிநாசினி குடித்துவிட்டதாகக் கூறியதாகவும், கடந்த பல நாட்களாகவே இவர் தான் கிருமிநாசினி குடிக்கப்போவதாகக் கூறிவந்ததாகவும் பின்னர் இவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதாகவும் ஆனல் அவர்மரணமடைந்து விட்டதாகவும் காலஞ்சென்றவரின் மனைவியான இவர் [illegible] கையில் தெரிவித்தார்.

பிரேதபரிசோதனை செய்த டாக்டர் ஆர், திருநாவுக்கரசு காலஞ்சென்றவரின் வயிற்றில் கிருமிநாசினி [illegible]ததாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [ந. நி.]

## 'டாக்ஸியை நீதிமன்றத்துக்கு கொண்டுவரவேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்

மண்டைதீவு கொலைவழக்கில் சம்பந்தப்பட்ட டாக்ஸியை பொலிஸ் பொறுப்பில் விடாமல் நீதிமன்ற பிணையில்விட அனுமதிக்க வேண்டுமென புறக்டர் எஸ்.சி.கதிரவேலு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து நீதிபதி டாக்ஸியை உடனடியாககோர்ட்டிற்குக் கொண்டுவரும்படி உத்தரவிட்டார்,

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி ஜமீல் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கில் மண்டைதீவில் சாம்பசிவமூர்த்தி என்பவரை குலசிங்கநாதன், சிவபாதசுந்தரம், பாலசிங்கம், தருமு ஆகியோர் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேல்விசாரணை அடுத்த மாதம் 4ந் திகதி நடைபெறும்.

## உபதபால் நிலையம் இருமாதமாக திறக்கபபடவில்லை

கொம்பனித்தெரு, செவ்.

கொம்பனித்தெரு உப தபால் நிலையத்தில் தபால் பகுதி அதிகாரிகளால் திடீர் பரிசோதனை நடத்திபல நூற்றுக்கணக்கான ரூபாய்கள் குறைந்திருப்பதைக் கண்டு தற்காலிகமாக மூடப்பட்டு இரண்டு மாதங்களாகியும் இன்னும்திறக்கப்படவில்லை. இதனல் மக்கள் கொம்பனித்தெரு தபால் கந்தோரில் கியூவில் நின்றுதான் முத்திரை வாங்கவேண்டிய நிலையில் இருக்கின்றது. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பல புகார்கள் செய்யப்பட்டும் இதுவரை எவ்விதநடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

## வேலைவாய்ப்பு

கொம்பனித்தெரு, செவ்.

கொழும்பு மாநகரசபையினர் வீதிகளை நன்கு சுத்தம் செய்து வைப்பதற்காக கொழும்பு நகரின் பலஇடங்களில் இரவு பகல் சேவை ஒன்றைஆரம்பித்துள்ளனர். இதனல் வேலையற்று இருந்த பல நூற்றுக்கணக்கானேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு உள்ளதோடு நகரின் சுத்தம் கெடாது பாதுகாப்பாக இருப்பதற்கும் வழி செய்கின்றது.

## ஆங்கில ஆசிரியர் இல்லை

சுழிபுரம், செவ்.

சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிஷன்பாடசாலையில் ஆங்கில உதவிஆசிரியர் உடனடியாக நியமனம்செய்யப்படவேண்டும் என கல்விப்பகுதியினருக்கு கடந்த தவணையின்போது சுட்டிக்காட்டியும் ஒருவரும் இன்னும் நியமிக்கப்படவில்லையாம்.

## வடமராட்சியில் மழை

இமையாணன், செவ்.

நீண்டகடும் வரட்சியின் பின் இங்கு பலத்த மழை பெய்தது. இமையாணன், உடுப்பிட்டி, தொண்டமனறு, நவிண்டில், நெல்லியடி போன்ற வடமராட்சிப் பகுதிகளில் பெய்த இம் மழையினல் நிலம் ஈரலிப்படைந்துள்ளது. இம்மழையுடன் வேகம் கூடிய காற்றும் வீசியது.

## செனட்டர்பதவி: ச. ச. நிலையம் கோரிக்கை

ஊர்காவற்றுறை, செவ்.

பிரபல வர்த்தகரும், சமூகத் தொண்டருமான திரு. நீதிராசாவை காலியாகும் செனட்டர் பதவிக்கு நியமனம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளும் தீர்மானத்தை கரம்பன் சனசமூகநிலையம் நிறைவேற்றியுள்ளது.

## நீர்கொழும்பு எம். பி. காலமானர்

கொழும்பு, செவ்.

நீர்கொழும்பு எம். பி. திரு. குவிண்டின் பெர்னண்டோ நேற்று காலமானர். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இவர் பிரதிநிதிகள் சபையின் கமிட்டிகளின் உபதலைவராவர் நீர்கொழும்பு நகர சபைத்தலைவராகவும் இருந்திருக்கிறார். கடந்த பொதுத்தேர்தலில் இவர் 15,290 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார். இவருக்கு வயது 71.

## இடமாற்றத்திற்கு எதிர்ப்பு

ஊர்காவற்றுறை, செவ்.

கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்திலிருந்து ஒரு பட்டதாரி ஆசிரியர் உட்பட ஆறு ஆசிரியர்களை திடீர்மாற்றம்செய்தமைக்கு நாரந்தனை கல்விச்சபையும், தீவுப்பகுதி எம். பி. யும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

கல்விச்சபைத்தலைவர் பொன். இரகுபதி தலைமையில் தூதுகோஷ்டி ஒன்று வடமாநில கல்விஅதிபரைப் பேட்டிகண்டு ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

குறித்த வித்தியாலயத்தின் தரத்தைக் குறைப்பதற்குச் செய்யப்பட்ட விஷமச்செயல் இது எனத் தீவுப்பகுதி எம். பி. புகார் கூறியுள்ளார்.

## பிரியாவிடை

ஊர்காவற்றுறை, செவ்.

தீவுப்பகுதிக் காரியாதிகாரியாகக் கடமையாற்றி இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு. பற்றிக்குக்கு கிராமசேவகர்களும் காரியாதிகாரி காரியாலய ஊழியரும் பிரியாவிடைவிருந்தளித்துக்கௌரவித்தனர்

## திருட்டு

ஊர்காவற்றுறை, செவ்.

காரைநகரில் மருதன் முத்தன் என்பவரின் வீட்டுக்கூரையைப் பிரித்து நகைகளையும் உடுப்புக்களையும் திருடர் களவாடிச் சென்றுவிட்டனர் எனச் செய்யப்பட்ட புகாரைத்தொடர்ந்து ஊர்காவற்றுறைப் பொலிசார் புலன்விசாரணை செய்கின்றனர்.

ஊர்காவற்றுறை, செவ்.

கரம்பன் கிராமசேவையாளர்பகுதியில் நேற்று இரத்ததானம் நடைபெற்றது. பல இளைஞர்கள் இரத்ததானம்செய்தனர்.

## புது முறை நாடகம்

முல்லைத்தீவு, செவ்

முல்லைத்தீவில் இம்முறை நடைபெறவிருக்கும் அகில இலங்கைச் சுகாதாரவிழாவில் முக்கிய நிகழ்ச்சியாக குடும்பக் கட்டுப்பாட்டைச் சித்தரிக்கும் ஒரு நாடகத்தை நடாத்தவேண்டும் என முல்லைத்தீவு சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் ரி. ஞானசுந்தரம் தெரிவித்துள்ளார். அதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. இப்பகுதியில் குடும்பக் கட்டுப்பாட்டை வெற்றிகரமாக அமுல்செய்வதே இதன் நோக்கம் என முல்லைத்தீவு சுகாதாரப் பரிசோதகர் திரு. வீ. கந்தையா கூறினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## "இலங்கை தேயிலைக்கு வெளிநாட்டில் விலை அதிகம்"

—டாக்டர் என். எம்.

கொம்பனித்தெரு, செவ்.

தபால் தந்திதொழில்சங்க முன்னணியின் ஆதரவில் அரசாங்கசேவை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர் டாக்டர் என். எம். பெரேராபேசுகையில், 'இலங்கைத் தேயிலை வெளிநாடுகளில் விலைகுறைந்து உள்ளதாகச் சொல்லுகின்றூர்கள். இதுமுற்றிலும்பொய் ஆனல் இலங்கையில்தான் விலைறைந்திருக்கிறதேயொழிய குவளிநாடுகளில் இல்லை. இதற்கெல்லாம் முக்கியகாரணம் ஏகாதிபத்திய வாதிகளின் செயல்தான்என்று கூறினூர்.

டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கா உட்படப்பலரும் பேசினர்.


**நியூ காலிங்கன்**

[இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

ஜெமினி—சாவித்திரி

நடித்த

**வல்லவனுக்கு வல்லவன்**

**ராஜா RAJAH**

யாழ்ப்பாணம் JAFFNA

தினசரி 2-30, 6-30, 9-45

போயாதினங்களில் 4காட்சிகள்

எஸ்.எஸ்.ஆர் -விஜயகுமாரி

நடித்த

**ஆனந்தி**

**MANOHARA**

Jaffna

Daily at 4-45, 7-00, 9-45

Jane Mansfield

in

**Too Hot To Handle**

(Adults Only)

**REGAL - JAFFNA**

Time: 4-15, 7-00. 9-45 p. m.

Joan Woodward

Stuart Whitman

in

**SIGNPOST TO MURDER**


உதைபந்தாட்டம்

# சாம்பியன் கோஷ்டி யாழ். பிரசிடன்டிடம் தோல்வி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தால் நடாத்தப்பட்ட 'லீக்' போட்டியில் 1966-ம் ஆண்டுசாம்பியனுகத்தெரிவு செய்யப்பட்ட சென்.மேரிஸ் உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும், யாழ்.பிறசிடன் தெரிவுக்கோஷ்டிக்கு மிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.பிறசிடன் கோஷ்டி 5—1 கோல்களால் சென்.மேரிஸ் கோஷ்டியை தோற்கடித்தது.

சென்.மேரிஸ் கோஷ்டி வீரர் மைக்கல்தாசும், பிறசிடன் கோஷ்டிக்கு வீரர்தேவராசாவும்தலைமைதாங்கினூர்கள்.

போட்டி ஆரம்பமாகி 10 நிமிடங்களின்பின் பிறசிடன் கோஷ்டி முதல் கோலைப் போட்டது. இடைவேளை விடும்போது பிறசிடன் கோஷ்டி 3—0 கோல்களைப் பெற்றிருந்தது. இடைவேளையின்பின் பிறசிடன் கோஷ்டி மேலும் இரு கோல்களைப் போட்டது. இக்கோல்களை சந்தியாக்கோ, மகேந்திரன், அப்பையா ஆகியோர் முறையே 2,1,2 ஆக அடித்தனர்.

சென்.மேரிஸ்கோஷ்டிஆட்டம்முடிவதற்கு பதினைந்து நிமிடங்கள் இருக்கும்போது அக்கோஷ்டியின் மத்தியமுன்னணி வீரர் அன்ரன் ஒரு கோலை அடித்தார்.

ஆட்டம் முடியும்போது சென்.மேரிஸ் கோஷ்டி5 - 1 கோல்களால் தோற்கடிக்கப் பட்டது.

யாழ்.மத்தியகல்லூரி அதிபர் திரு. சபாலிங்கம், இவ் வருடச்சாம்பியனுன சென்.மேரிஸ் கோஷ்டிக்கு'அப்போதிக்கரி' வெள்ளிக்கிண்ணத்தை வழங்கினூர்.

## திருக்குறள் மகாநாடு

சங்கானை, செவ்.

பதினைந்தாவது திருக்குறள் மகாநாடு இந்து வாலிபர் மன்றத்தின் ஆதரவில் சங்கானையில் மே மாதம் 22, 23, 24-ம் திகதிகளில் நடைபெறும். திருக்குறள் சம்பந்தமான விளக்க கண்காட்சியொன்றும் மகாநாட்டில் இடம்பெறும்.

## ஆண்டு விழா

உடுப்பிட்டி, செவ்.

உடுப்பிட்டி, இமையாணன் சிவனடிச் சங்கத்தின் 40-வது ஆண்டுவிழாவும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளும் தலைவர் ந. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றன. மாலையில் கலை, கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## கிரிக்கெட் போட்டி

உடுவில், செவ்வாய்

உடுவில் கோஷ்டிக்கும் மல்லாகம் கோஷ்டிக்குமிடையே உடுவிலில் நடைபெற்ற சினேகபூர்வமான ஒரு கிரிக்கட்பந்தாட்டத்தில் மல்லாகம் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர்.

முதலாவது ஆட்டத்தில் மல்லாகம் கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 98 ஓட்டங்களையும், உடுவில் கோஷ்டி சகல விக்கட் நஷ்டத்துக்கும் 74 ஓட்டங்களையும் பெற்றன. இரண்டாவது ஆட்டத்தில் உடுவில் கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 66 ஓட்டங்களையும், மல்லாகம் கோஷ்டி 87 ஓட்டங்களையும் முறையே பெற்றன.

முடிவில் 45 ஓட்டங்களால் மல்லாகம்கோஷ்டி வெற்றிபெற்றது.

## சைவ அபிவிருத்தி சங்க நிர்வாகிகள்

புத்தளம், செவ்.

புத்தளம் சைவஅபிவிருத்திச்சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் தவலிங்கம், உபதலைவர்கள்: டாக்டர் ஆ. பேரின்பநாயகம், திருவாளர்கள் செ. குணரெத்தினம், கே. கோபாலரத்தினம், ப. திருமால், கே. எம். சுப்பிரமணியம், செயலாளர்: திரு. சி. கந்தையா. துணைச் செயலாளர் திரு. ஏ. வி. நடராசா. பொருளாளர்: திரு. த. தங்கராசா, உப பொருளாளர்: திரு. எஸ். சம்பந்தன். பத்துப்பேரடங்கிய நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

'சைவசமயத்தைச் சேர்ந்த சகலரும் ஆலயத்துள் சென்று வழிபட அனுமதிக்கப்பட வேண்டும்' எனத் தெரிவிக்கும் தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## கே.எம். பிக்கு புதியபதவி?

கொம்பனித்தெரு, செவ்.

மீன்பிடிக் கூட்டுஸ்தாபனத் தலைவர் பதவியிலிருந்து அண்மையில் ராஜிஞமாச் செய்த கே.எம்.பி. இராஜரத்திஞவுக்கு காணி நீர்ப்பாசன அமைச்சிஞல் நீர்வளசபையின் தலைவர்பதவி வழங்கப்பட விருப்பதாகத் தெரிகிறது.

## சூதாடினர்களாம்

ஊர்காவற்றுறை, செவ்.

ஊர்காவற்றுறை புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலய திருவிழா சமயத்தில் அண்மையில் உள்ள இடுகாட்டில் சூதாடிய நால்வரை ஆலயத்தில் கண்காணிப்பு நடாத்திய ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

## இந்துவாலிபர் சங்க ஆண்டுவிழா

கைதடி, செவ்வாய்

கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் ஆண்டுவிழா கைதடி சேதுகாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் திரு. ஆ. பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

சங்கப் பொதுச்செயலாளர் திரு. ஆ. கந்தையா வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து பேசுகையில், சங்கம் இந்துமதத்தை நூல்கள் வடிவிலும் வரலாற்று ஆராய்ச்சி முறையாகவும் கலந்துரையாடல் வழியிலும் மகாநாடுகளாலும் வளர்த்து வருவதாகத் தெரிவித்தார்.

கைதடி - நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு க. தம்பிப்பிள்ளை, திரு. க. நடாராச, திரு. வ. சுப்பையா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

புதுவருடநிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆ. பொன்னையா, உபதலைவர்கள்: சு. கோடீஸ்வரன், வ. முத்துக்குமாரசாமி, இ. சிதம்பரப்பிள்ளை, பொதுச் செயலாளர்: ஆ. கந்தையா, இணைச்செயலாளர்கள்: இ. நடராசா, கோ. தேவராசா, பொருளாளர்: வ. சுப்பையா, துணைப்பொருளாளர்: மு. சந்திரசேகரம், சமயப்பிரசார அமைச்சர்: சி. சரவணமுத்து, கணக்குப் பரிசோதகர்: இ. மயில்வாகனம்.

## அபராதம்

ஊர்காவற்றுறை, செவ்.

ஊர்காவற்றுறை வாசியான மாரிமுத்து நாகமுத்து என்பவர் சட்டவிரோதமாகச் சாராயம் விற்ற குற்றத்திற்கு ஊர்காவற்றுறை பொலிஸ்நீதிபதி திரு. எம். ஜமீல் ரூபா 50 அபராதம்விதித்தார்.

## வரிவிளம்பரம்


**கல்வி**

யாழ்ப்பாணக்கல்வி நிலையம் மகளிர் பகுதி பின்வரும்வகுப்புக்கள் 1-5-67-ல் ஆரம்பமாகும். 1. பொதுக் கல்வித் தராதர பத்திர உயர்தர வகுப்புக்கள் கலைப் பகுதி, விஞ்ஞானப்பகுதி (G. C. E. Advance Levl Arts & Seience). 2. கலைப்பகுதித் தகுதிப் பரீட்சை(G. A. Q.). 3. சிங்களம். 4. ஆங்கிலம். 5. வர்த்தகக்கல்வி. 6. தையல். 7. சங்கீதம். 8. கைப்பணி. யாப்பாணக் கல்விநிலையம் 304/3 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 1934


வல்வை சம்பவம்:

## 'நடவடிக்கை எடுக்குக'

யாழ்ப்பாணம், புதன்

வல்வெட்டித்துறையில் அண்மையில் நடைபெற்ற பொலிஸ், இராணுவ அட்டூழியம் பற்றி விசாரணை செய்து, உடனடியாக சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசாங்கலிகிதர் சங்க யாழ்ப்பாணக் கிளையினர் பிரதம மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள மஜகரில் கோரியுள்ளனர்.

வல்வெட்டித்துறையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பொதுமக்களை அநீதியானமுறையில் தாக்கியது இதுதான் முதல் தடவை அல்ல என்றும், காலத்துக்குக்காலமாக பலதடவைகள் இப்பகுதி மக்கள் பொலிஸாரினதும் இராணுவத்தினரினதும் மிருகத்தனமான தாக்குதல்களால் அல்லலுற்றதோடு பலர் இறந்துள்ளனர் என்றும். ஆதலால் இதுசம்பந்தமாக பூரண நடவடிக்கைகளை மேற்கொண்டாலே இப்பகுதி மக்கள் இனிவருங் காலங்களில் பயமின்றி அமைதியாக வாழமுடியும் எனவும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. [ந. நி.]

## தவருன முறையில்நடந்த ஆசிரியர் வேலை நீக்கம்

யாழ்ப்பாணம், புதன்

பெரியபுலம் மெதடிஸ்ட் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியராக கடமையாற்றிய திரு. ஆசீர்வாதம் லோறன்ஸ் பதவியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் 1965-ம் ஆண்டு டிசம்பர் 25 ம் தேதி தனது பாடசாலையில் பயின்று கொண்டிருந்த மாணவியை கூட்டிக்கொண்டு சென்றுவிட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டது இதனைத்தொடர்ந்து, 1-2-66-ல் இவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டார். கல்வி அமைச்சு இவர் மீது சாட்டப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகள் மீது விசாரணை செய்து வேலை நீக்கம் செய்திருப்பதாக அறிவித்துள்ளது.

வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர் 5 பிள்ளைகளுக்குத் தந்தையுமாவர்.


**5-வது வெற்றி வாரம்**

**நீவொளி** [நுவரெலியா] **கிங்ஸ்லி** [கொழும்பு]

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்] **விஜிதா** [ஹட்டன்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!

வேதனை விளிம்பிலே மாதர்கள் இருவர்!!

ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!

அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!

கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

**ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி**

**மனேகர், அசோகன், வசந்தா,**

**தங்கவேலு, மனேரமா, கருணநிதி**

மற்றும் பலர் நடிக்கும்

**இரு வல்லவர்கள்**

**ஸ்ரீ கதிரமலை பாதை திருப்பணி நிதி**






கதிரமலை பாதை படிக்கட்டு திருப்பணி வேலைகளை நான் செய்து வருகிறேன். இதற்குப் போதிய நிதிஉதவி தருமாறு அன்பர்களைப் பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

இத்திருப்பணியின் பெயரால் நிதிதிரட்ட நான் யாரையும் நியமிக்கவில்லை. எனவே வேறு எவருக்கும் இந்த நிதியைப்பெற உரிமையில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இத்திருப்பணிக்குத் தபால் மூலம் நிதிஅனுப்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

கதிரமலை,
கதிர்காமம் P. O.
இலங்கை.

இங்ஙனம்
சாது ச. முருகேசு,

1754


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தானில் காங்கிரஸ் ஆட்சி?

## ராஷ்டிரபதி ஆட்சியை நீக்க கவர்னர் ஹூக்கும் சிங் சிபார்சு

ஜெய்ப்பூர், ஏப்ரல் 25 ராஜஸ்தான் கவர்னர் திரு. ஹுக்கும்சிங். ராஜஸ்தான் சட்டசபையில் காங்கிரஸ்கட்சிக்கே பெரும்பான்மை இருப்பதாகத் தீர்மானித்துள்ளார்.

காங்கிரஸ்கட்சியும் சம்யுக்த தளமும் வெவ்வேறு ஜாபிதாக்களை கவர்னரிடம் சமர்ப்பித்திருந்தன. காங்கிரஸ் ஜாபிதாவில் 94 அங்கத்தவர்களும், சம்யுக்த தளத்தின் ஜாபிதாவில் 106 அங்கத்தவர்களும் இருந்தனர். ஆனால் 21 அங்கத்தவர்களின் பெயர்கள் இரு ஜாபிதாக்களிலும் இருந்தன.

கவர்னர் திரு. ஹுக்கும் சிங், இந்த 21 அங்கத்தவர்களையும் தனித்தனியேபேட்டி கண்டார். அவர்கள் அனைவரும் தாம் காங்கிரசையே ஆதரிப்பதாக எழுத்துமூலம் கவர்னரிடம் தங்களின் விருப்பத்தைத் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்தே ராஜஸ்தானில் காங்கிரசே பெரும்பான்மைப் பலம் கொண்டுள்ளதாகக் கவர்னர் முடிவுசெய்துள்ளார்.

கவர்னரின் இம்முடிவை ராஷ்டிரபதிக்குக் கடிதமூலம் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில், ராஜஸ்தானில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ராஷ்டிரபதி ஆட்சியை இனி நீக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# 'திரைப்படம்வாழ்க்கையுடன் பின்னப்பட வேண்டும்'

## விமர்சகர் டாக்டர் மான்வெல் கருத்து

யாழ்ப்பாணம், புதன் "திரைப்படங்கள் அனேகமாக வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டனவாக அமைய வேண்டும். அப்போதுதான் அவைகள் மக்கள் மனதில் அழியாதுநிரந்தரமாகஇடம் பெறமுடியும்" என்று மேல்நாட்டு பிரபல ஆங்கிலத் திரைப்பட விமர்சகரான டாக்டர் ரோஜர் மான்வெல் நேற்று முன்தினம் மாலை யாழ். பிரதேச கலாமன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விசேஷ கூட்டமொன்றில்பிரிட்டிஷ் திரைப்பட தற்கால உத்திகள் என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வடமாகாண அரசாங்க அதிபரும் மேற்படி பிரதேச கலாமன்றத் தலைவருமான திரு வேர்ணன் அபயசேகரா தலைமையில் யாழ்ப்பாணம் றிம்பர் மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. மான்வெல் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

சினிமாப் படங்களைத் தயாரிப்பதைப் பொறுத்தமட்டில் பிரிட்டிஷ் தயாரிப்பாளர்கள் எவ்வளவோ முன்னேறியுள்ளார்கள். படங்களில் 'செற்றிங்ஸ்' குறைக்கப்பட வேண்டும். ஒரு ஸ்ருடியோ விற்குள்ளேயே காட்சிகளைப் படப்பிடிப்புச் செய்வதும் குறைக்கப்படல்வேண்டும். பொதுமக்கள் வாழும் இடங்களுக்குச் சென்றுஅந்தந்த இடங்களில் இயற்கையாகவே அமைந்துள்ள இடங்களிலேயே வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்க வேண்டும்.

சினிமாப்பட நடிகர்கள் சாதாரணமாகவே படப்பிடிப்பின் போதும் பேசி நடிக்கப் பழகவேண்டும் அப்போதுதான் படங்கள் பிரபல்யமாக முடியும். இந்தச் செலவுகளைக் குறைப்பதற்காக மேலைத்தேசத்தில் பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள்கூட்டாகச் சேர்ந்து வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்குகின்றனர்.

தமிழ்ப் படத் தயாரிப்பைப் பொறுத்தமட்டில் இவர்கள் 40 வருடம் பின் தங்கியுள்ளார்கள் என்பதை என்னால் உணரமுடிகின்றது. இந்த நிலைமாற வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்ப் படச்சங்கம் அமைக்கப்பட வேண்டும்.

டாக்டர் திரு. கபிரியேல் நன்றி தெரிவித்துப் பேசினார். [ந.நி]

# 'நமது கலாசார அடிப்படையில் நாடகங்கள் தயாரிக்க வேண்டும்'

## கலையரசு கருத்து

யாழ்ப்பாணம், புதன் "சினிமாவைப் பின்பற்றி தயாரிக்கப்படும் நாடகங்களையே நாட்டின் பல பகுதிகளிலும் நாம் இன்று காண முடிகின்றது. இந்த நிலை மாறவேண்டும். நாடகம் வேறு. சினிமா வேறு. சினிமாவையும் நாடகத்தையும் ஒன்றாகக் கலப்பதாலேயே ரசிகர்கள் ரசிக்கமுடியாத நிலையிலிருக்கின்றார்கள். ஒரேபாணியில் நாடகங்களைத் தயார்ப்பதால் நாடகங்கள் சிறப்பாக அமைய மாட்டா. நமது கலாச்சாரங்களின் அடிப்படையில் நாம் நாடகங்களைத் தயாரிக்க வேண்டும்."

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆதரவில் யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற சித்திரா பௌர்ணமிக்கலைவிழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கலையரசு திரு. சொர்ணலிங்கம் குறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்துபேசுகையில், இசை நாடகங்களுக்கும், மொழிபெயர்ப்பு நாடகங்களுக்குமே இன்று மக்கள் மத்தியில் வரவேற்பு இருப்பதால் இப்படியான நாடகங்களைத் தயாரிப்பதில் நாடக மன்றங்களும், தயாரிப்பாளர்களும் கவனம்செலுத்த வேண்டும்என்றார்.

'ஒதல்லோ', 'அந்திராசி' 'வேலைபோன விதானையார்' ஆகிய மூன்று நாடகங்களும் இக் கலைவிழாவில் மேடையேற்றப்பட்டன. [ந.நி]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இலங்கை சிறுவர் ஓவியங்கள் லண்டனில்

லண்டன், ஏப். 25 ராயல் ஓவிய சங்கத்தின் ஆதரவின் கீழ் சிறுர்களின் ஓவியக்கண்காட்சி லண்டன் ஹில்கோல்ட் கலாமண்டபத்தில் நடந்தது. இந்த ஓவியக்கண்காட்சிமேமாதம் 6-ம் திகதிவரை நடைபெறும்.

206 ஓவியங்கள் இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் 13 ஓவியங்கள் இலங்கைச் சிறுவர்களுடையதாகும். இலங்கை உட்பட ஆறு வெளிநாடுகளைச் சேர்ந்த சிறுவர்களின் சித்திரங்கள் காட்சிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளன. ஹொங்கொங், கென்யா, ஜமேய்க்கா, மொரிஸஸ், ஜெர்மனி ஆகியவையே ஏனைய நாடுகளாகும்.

## கடன்களை. . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிள்ளை அடக்கமாகக் கூறினார்.

"எதற்காக இவ்வளவு தொகைகடன்பட்டீர்கள்?" என்று கேட்டேன்.

"ஊரோடு வந்ததும் அவர் சும்மா இருக்கவிரும்பவில்லை. போத்தலில் கள் அடைத்து விற்கும் கம்பனி ஒன்றை ஆரம்பித்தார். அதனால்தான் கடன் வந்தது" என்றார்.

"இலாபம் கிடைத்ததா" என்றேன். "ஒரு சதமும் லாபமில்லை. இரண்டு வருடமாக இந்த வியாபாரம் செய்ததால் பெரும் நஷ்டம். அதற்கு வாங்கிய சாமான்கள் எல்லாம் பழுதடைந்துவிட்டன" என்று வள்ளிப்பிள்ளை கூறினார்.

"கடையில் வருமானம் கிடைக்கிறதா?" என்றேன். கடை வருமானத்தை மட்டும் கொண்டு நாங்கள் சீவியம் நடத்தவில்லை. அவருக்கு 200 ரூபா பென்சன் கிடைக்கிறது" என்று கூறினார்.

இது உங்கள் சொந்தக் கடையா? என்று கேட்டபோது, இல்லை; இதை வாடகைக்கு எடுத்துத் தான் நடத்துகிறோம். இதிலும் கொஞ்சக் கடன் நிற்கிறது என்று கூறினார்.

சுவீப் விழுந்ததை முதலில் யார் கண்டுபிடித்தார்கள் என்றேன். உடனே அவர் நாணிக்கோணி சிரித்தபடி அவர் தான்; வேறை யார் என்றார்.

அவர் மேலும் கூறியதாவது:

கடந்த ஒரு வருடமாக சுவீப் விற்று வருகிறோம். எங்கள் கடையில் ஒருபொடியனை வைத்துத் தான் சுவீப் டிக்கட்டுகள் விற்போம். இம்மாதம் பொடியனுக்குச் சுகமில்லை. அதனால் 150 டிக்கட்டுகள் மிஞ்சிவிட்டது. இவர் டிக்கட்டுகளில் 'சீல்' அடித்துவிட்டார். சீல் அடித்த டிக்கட்டுகளை ஏஜெண்டு திருப்பி எடுக்க மாட்டார்கள். அதனால் இந்த அதிர்ஷ்டம் கிடைத்தது.

கடன்களை கொடுத்துவிட்டு பிள்ளைகளின் கல்விக்காக கொஞ்சப் பணத்தை ஒதுக்கப்போவதாகவும் அவர் கூறினார்.

## கல்முனைக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

சாய்ந்தமருது, கல்முனை மூன்றும்குறிச்சி ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து பாண்டிருப்பில் தஞ்சம்புகுந்துள்ள ஆயிரம் குடும்பங்களும், தங்கள் பழைய இடங்களுக்குத் திரும்பிச்செல்லுமாறு அரசாங்க அதிபரும் பொலிஸ் உதவி அதிபரும் விடுத்தகோரிக்கையை நிராகரித்துவிட்டனர். வீடுகள் எரிக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டபின் அங்குபோய் என்ன செய்வதென்று அவர்கள் கேட்டுள்ளனர்.

இதேசமயம் கல்முனைச்சம்பவம்பற்றி விசாரிக்க விசாரணைக்கமிஷன் ஒன்றுநியமிக்க வேண்டுமென கல்முனை சென்று திரும்பிய தமிழ்க் காங்கிரஸ்தலைவரும் யாழ்ப்பாண எம். பி. யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பிரதமரைக் கேட்டிருக்கிறார். நல்லூர் எம். பி. டாக்டர் இ. மு. வி நாகநாதனும் கல்முனை நிலைமைபற்றி பிரதமருக்கு ஒருகடிதம் எழுதியுள்ளார்.

# வடக்கு, கிழக்கு....

(1- ம்பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 8-ம் திகதி வல்வெட்டித்துறையில் நடைபெற்ற சம்பவம் சம்பந்தமாக பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்ததற்காக நன்றிதெரிவிக்கும் வகையிலமைந்த கடிதம் ஒன்றை தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் ஈ. மு.வி. நாகநாதன் பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தில் டாக்டர் நாகநாதன் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தங்களுடனும் தங்களது நிரந்தரக் காரியதரிசியுடனும் இன்ஸ்பெக்டர் ஜெனரலுடனும் நாங்கள் நடத்திய சம்பாஷணையின்போது எடுத்துக்கூறிய நான்கு அம்சங்கள் பற்றி நான் தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். இது சம்பவம் பற்றி விபரமாக தெளிவு கொள்ளவும் உதவும் என நம்புகின்றேன்.

முதலாவதாக இம்மாதம் 8-ம் திகதிய சம்பவத்துக்கும் கள்ளக்கடத்தல் சட்டவிரோதக் குடியேற்றம் ஆகியவற்றுக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். வானொலிச் செய்தி ஒலிபரப்பும் சில பத்திரிகைகளில் வெளியான செய்திகளும் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை தோற்றுவித்துக் குழப்பமுயன்றுகொண்டதாலேயே நான் இதனை வற்புறுத்திக் கூறவேண்டிய அவசியமேற்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை மக்களும் தலைவர்களும்பொலிஸ் இராணுவ தொல்லைகளை ஆட்சேபிக்கும் வகையில் கூட்டமொன்றை ஏற்பாடு செய்து நடத்தியபோது தான் இச்சம்பவம் நடந்ததென்பதே உண்மையான விஷயம்.

## இராணுவம் தலையிட என்ன அவசியம்?

இரண்டாவதாக பொதுமக்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் இராணுவம்தலையிடுவதற்கு எவ்வித முகாந்திரமுமில்லையென்பதைக் குறிப்பிடவிரும்புகின்றேன். சட்டபூர்வமாக பொறுப்புள்ளமக்கள் கூட்டும் பொதுக்கூட்டங்களில் சர்வாதிகார நாடுகளில்தான் இராணுவத்தினர் தலையிடுவது வழக்கம். ஜனநாயகத்தின் புனித சின்னங்களில்ஒன்றாகிய பொதுக்கூட்டம் நடாத்தும் உரிமையை இலங்கை அரசாங்கம் அழிக்கவிரும்புகிறதா? சமாதானமாக நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் இராணுவமும் பொலிஸாரும் ஒரே நேரத்தில் வந்து சேர்ந்தன என்று ஊர்ஜிதப்படுத்தப் பட்டுள்ளது.

மூன்றாவதாக, பொலிஸாரும் இராணுவத்தினரும் வந்துகுண்டாந்தடிகளாலும் கற்களாலும் பொதுமக்களை அடித்து இடித்துத்துன்புறுத்தும் வரையில் கூட்டம் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்திருக்கிறது. ஆயுதம் தரியாமல் வந்த இராணுவத்தினர் கற்களையும் சப்பாத்துக்களையும் உபயோகித்து பல சைக்கிள் வண்டிகளை முறித்தனர். இதைத் தொடர்ந்து பொதுமக்கள் கற்களாலும்சோடாப்போத்தல்களாலும் திருப்பி அடித்தபோது பொலிஸ்காரர் துப்பாக்கிப்பிரயோகம்செய்தனர்.

பொதுமக்கள் அத்துமீறி நடந்திருந்தால் மேடையிலேறி அவர்களை எச்சரிக்கை செய்து குழப்பம் ஏற்பட்டால் இரண்டு மூன்று நிமிடங்களில் கூட்டத்தைகலைப்போம் என்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் எச்சரிக்கை செய்திருக்கலாம்.

நான்காவதாக, அன்றைய வேலையைமுடித்துக்கொண்டு வீடு திரும்பிய ஆர். வி. ஜி. பீடிக்கம்பனி முதலாளியின் மகனை, அவர் வானில் வந்துகொண்டிருந்தபோது மூன்று பொலிஸ்காரர் சன சமூக நிலையத்துக்கெதிராகத் தடுத்துநிறுத்தி, முன்நடந்த சம்பவங்கள் ஒன்றையும் அறியாத அவரை கீழே இறங்கச்சொல்லி வற்புறுத்தி அவரைஅந்தமூன்று பொலிஸ்காரர்களும் குண்டாந்தடிகளால் தாக்க இன்னொரு பொலிஸ்காரர் அவரைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தியிருக்கிறார்.

இச்சம்பவம் பற்றிய மாஜிஸ்திரேட் விசாரணைமுடியும் வரை எதுவும் செய்யமுடியாதாயினும் வடக்கிலும் கிழக்கிலும் நடந்துவரும் இராணுவ ஆட்சி பற்றிய கொள்கைகளை இது விஷயம் ஒரு பொதுவிசாரணைச்சபையினால் தீர விசாரிக்கப்பட்டபின் கூடிய விரைவில் மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

## மாவட்டசபை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மௌனம் சாதிப்பதன்மூலம் இத்தவறான பிரசாரத்தை முறியடித்துவிட முடியாது. நீங்கள் அதை எதிர்த்துச் சமாளித்துத் தானாகவேண்டும்' என்று டாக்டர் நாகநாதன் பிரதமரைக் கேட்டுள்ளார்.

'மாவட்டசபைகள் அமைப்பது எங்கள் கொள்கை' என்பதை வெளிவெளியாகச் சொல்லுங்கள் என்று டாக்டர் நாகநாதன் பிரதமரைக் கேட்கிறார்.

மாவட்டசபைகளின் அமைப்பு, அவை இயங்கும் முறை, அவற்றில் அங்கம் வகிடபவர்கள்பற்றி தெளிவாகக்கூறும்படிபிரதமருக்கு அவர் யோசனையும் தெரிவித்திருக்கிறார்.

நாடு இரண்டாகப் பிரிந்துவிடும் என்றும் நாடு பிளவுபட்டுவிடும்என்றும் எதிர்க்கட்சியினர் செய்யும் பிரசாரத்தை 'முழு முட்டாள்தனம்' என்று பிரதமர் கண்டிக்க வேண்டுமென்றும் டாக்டர் நாகநாதன் தமது கடிதத்தில் பிரதமருக்கு யோசனை தெரிவித்திருக்கிறார்.

டாக்டர் என். எம். பெரேரா உட்பட முன்னைய கூட்டாட்சிவாதியினர் மாவட்டசபை அமைப்பதைத் தங்கள் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருப்பதால் பார்லிமெண்டில் மாவட்டசபை மசோதா சுலபமாக நிறைவேற்றப் படுமென்பதில் தமக்குச் சந்தேகமில்லையென்றும் பிரதமர் தெளிவாக்கலாம் என்றும்டாக்டர் நாகநாதன் யோசனை தெரிவித்திருக்கிறார்.

## விற்பனைக்கு

காணி:

கனகரத்தினம் வீதியில் நாயன்மார்கட்டு குளத்திற்கு அருகாமையில் குடியிருக்கவசதியான இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: மலேயன், ஸ்ருடியோ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1937

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org